தமிழ்நாடு சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1972 டிசம்பர் 8

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

(1) வினாக்கள்—விடைகள்

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

அரசு அலுவலகங்களில் வேலை நாட்கள்

* 81. **வினா—திரு. என். கிட்டப்பா**: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நமது மாநிலத்தில் உள்ள என். ஜி. ஓ. க்கள் வாரத்திற்கு ஐந்து நாள் வேலைத் திட்டமும், ஓவர் டைம் அலவன்ஸ் திட்டமும் தமிழ்நாடு அரசு அலுவலகங்களில் கொண்டுவரப்பட வேண்டுமென்று வலியுறுத்தி உள்ளனரா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இம் மாநிலத்திலுள்ள அரசு அலுவலகங்களில் வாரத்திற்கு ஐந்து வேலை நாள் திட்டத்தைப் பின்பற்ற வேண்டுமென்று என்.ஜி.ஓ. சங்க 45-வது மாநில மாநாட்டின் கோரிக்கை மீது விரைவில் ஆணைகள் பிறப்பிக்க வேண்டுமெனத் தமிழ்நாடு என்.ஜி.ஓ. சங்கப் பொதுச் செயலாளர் கேட்டுள்ளார். இந்தக் கருத்து 12—7—1972-ல் நடந்த தமிழ்நாடு நாட்டியற்பணிகள் (Civil Services) இணைக்குழுக் கூட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எனினும், ஒரு மாதத்தில், மேலும் ஒரு சனிக்கிழமையை விடுமுறை நாளாக அறிவிக்கலாம் என்றும், எஞ்சிய நாட்களில் வேலை மணி நேரத்தை அதிகப் படுத்தலா மென்றும் கருதப்பட்டது. என்.ஜி.ஓ. சங்கத் தலைவர். வேலை மணி நேரத்தை அதிகப்படுத்துவதற்கும், இவ்வகையில் அலுவலக வேலை நேரத்தை காலை 9-30 மணியிலிருந்து மாலை 4-30 மணி என்று வரையறுக்கவும் ஒப்புக்கொண்டார். தலைமைச் செயலகச் சங்கத்தின் பொது குழுவைக் கலந்தாலோசித்த பின்னர், தலைமைச் செயலகப் பணியாளர்களுக்கு எந்த நேரம் பொருத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவிக்கத் தலைமைச் செயலகச் சங்கத் தலைவர் ஒப்புக் கொண்டுள்ளார். மிகை நேரப் படி வழங்க வேண்டி என்.ஜி.ஓக்களிடமிருந்து கோரிக்கை எதுவும் வரவில்லை.

திரு. என். கிட்டப்பா : துணைத் தலைவர் அவர்களே, ஓவர் டைம் அலவன்ஸ் திட்டத்தைப் பற்றி அரசு ஏதேனும் ஆலோசித்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது பற்றிக் கோரிக்கை வரவில்லை. வலியுறுத்தவும் இல்லை. ஆகவே, பரிசீலிக்கத் தேவையில்லை. பரிசீலிப்பதும் இயலாத காரியம்.

திரு. நா. வீராசாமி : ஏற்கனவே ஒரு சனிக்கிழமை விடுமுறை விட்டுக் கொண்டு வரப்படுகிறது. இன்னொரு சனிக்கிழமையையும் விடுமுறையாக விட பரிசீலிப்பதாகச் சொன்னார்கள். ஒரு மாதத்தில் இரண்டு சனிக்கிழமைகள் விடுமுறை என்றால் எந்தெந்த சனிக்கிழமைகள் ? ஏற்கனவே ஒரு சனிக் கிழமை விடுமுறை விடுவதைப் பொறுத்து எந்தச் சனிக்கிழமை விடுமுறை என்று சாதாரண மக்களுக்குத் தெரிவதில்லை. ஆகவே, அந்த சனிக்கிழமை யையும் வேலை நாளாக வைத்துவிட்டு வேலை நேரத்தை முறைப்படுத்துவது பற்றிப் பரிசீலிக்கப்படுமா ? இல்லையென்றால் ஒரு பகுதியினருக்கு இந்த சனிக் கிழமை விடுமுறை, இன்னொரு பகுதியினருக்கு இன்னொரு சனிக்கிழமை விடு முறை என்று ஷிப்ட் முறையை அரசாங்கம் கொண்டு வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போது உத்தேசிக்கப்பட்டிருப் பது மேலும் ஒரு சனிக்கிழமை, நான்காவது சனிக்கிழமை விடுமுறையாக விடுவது பற்றியாகும். இதிலே இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. இன்னொரு சனிக் கிழமையும் விடுமுறையாக விடுவதால் ஒவ்வொருநாளும் கொஞ்சம் அதிக மணி நேரம் வேலை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள். என்.ஜி.ஓ. சங்கத்தினர் அதை ஒப்புக் கொண்டு தங்களு டைய கருத்தை அறிவித்து விட்டார்கள். ஆனால் தலைமைச் செயலகப் பணி யாளர்கள் என்ன முடிவு எடுக்கிறார்கள் என்பதைப் பொறுத்து முடிவு எடுக்கப் படும். இப்போது காலை 10 மணி முதல் மாலை 4½ மணி வரை தலைமைச் செயலகம் மற்ற அலுவலகப் பணிகள் நடைபெறுகின்றன. மேலும் ஒரு சனிக்கிழமை விடுமுறை விடுவதாக இருந்தால் காலை 9½ மணி என்றும் மாலை 4-30 மணியை அப்படியே வைத்துக் கொள்வது என்றும் யோசிக்கப் பட்டு வருகிறது. இவை எல்லாம் இன்னும் முடிவுக்கு வந்துவிடவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : 9-30 மணிக்கு ஆரம்பித்து 4-30 மணி வரை வேலை செய்வது என்பது பற்றி முடிவு செய்யும்போது நீதிமன்றங்களில் வேலை செய்கின்ற துறையினரின் அபிப்பிராயங்களையும் அரசு கேட்குமா ? அந்தத் துறைக்கு இது பொருந்துமா ?

1972 டிசம்பர் 8]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இன்னும் தலைமைச் செயலகத்தினுடைய அலுவலாளர்களின் அபிப்பிராயமே வந்து சேரவில்லை. அது வந்த பின்னர் நீதிமன்ற அலுவலாளர்களின் அபிப்பிராயம் தேவைப்பட்டால் கேட்கப்படும்.

திரு. ஆ. பரந்தாமன்: வாரத்தில் ஐந்து நாட்கள் என்றால் பல அரசு வேலைகளுக்குப் பாதகம் ஏற்படாதா? அதே நேரத்தில் சட்டமன்றம் கூட ஐந்து நாட்கள்தான் நடைபெற வேண்டுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சனிக்கிழமை விடுமுறைக்கும் சட்டமன்றத்திற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. வி. கே. இராஜாப் பிள்ளை: மத்திய அரசு அலுவலகங்களிலோ அல்லது வேறு எந்த மாநில அரசு அலுவலகங்களிலோ இரண்டு சனிக்கிழமைகள் விடுமுறை விடும் திட்டம் அமலில் இருக்கிறதா? இப்படி வேலை நேரத்தை மாற்றுவதால் அரசுக்கு அதிகம் செலவாகுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்த மாற்றத்தை என்.ஜி.ஓ. சங்கத்தினர் கோருகிறார்கள். அரசுக்குச் செலவு இல்லாத வகையில் இருந்தால்தான் அரசு இந்த மாற்றத்தைக்கூட ஏற்றுக் கொள்ளும். மற்ற மாநிலங்களில் இது போன்று இரண்டு சனிக்கிழமைகள் விடுமுறை விடப்படுகின்றனவா என்ற தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. ந. தருமலிங்கம்: என்.ஜி.ஓ. க்கள் அல்லாத அரசாங்க அலுவலாளர்களுக்கும் ஐந்து நாள் வேலைத் திட்டத்தைக் கொண்டுவர அரசு யோசிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதுபற்றி முடிவு எடுக்கப்பட்ட பிறகு அதுபற்றி யோசிக்கப்படும்.

திருப்பூர் நகருக்கு புதைச் சாக்கடைத் திட்டம்

* 82. **வினா—திரு. சு. துரைசாமி:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கக் கோரி திருப்பூர் சட்டப்பேரவை உறுப்பினரிடமிருந்து 18—8—1970 தேதிய விண்ணப்பம் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?